யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 30 ஷஃபா 2 இதழ் 61
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-4-1986

## இலங்கை அரசின் திட்டம்: டிக்ஸிற் டில்லிக்கு அனுப்பிவைத்தார்!

[கொழும்பு]
இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும்பொருட்டு இலங்கை அரசு முன்வைத்துள்ள புதிய ஆலோசனைகள் அடங்கிய அறிக்கையை இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் புதுடில்லிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இனப்பிரச்னையைத் தீர்ப்பதன் புதிய அணுகுமுறையாக தமிழ்ப் பகுதிகளுக்கு உத்தேச சுயாட்சி முறையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

அத்துடன் தமிழ்ப்பகுதிக்கான சட்டம், ஒழுங்குமுறை, காணி குடியேற்றம், மத்திய அரசின் அமைச்சரவையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம், பிராந்திய சபை அதிகாரம், நிர்வாகச் சேவை, காணிப் பங்கீடு, ஆயுதப்படைப்பிரிவு போன்ற விடயங்களில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறித்தும் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றில் சிலவற்றுக்கான (5ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் - அமெரிக்க உதவியுடன் சர்வதேச விமானப் படைத் தளமாகப் பலாலி மாறும்!

## வெளியேற்றப்பட்ட மக்களுக்கு ரூபா 2 கோடி 50 லட்சம் நஷ்டஈடு

(கொழும்பு)

**பலாலி படைத் தளத்தை பிரிட்டனின் அல்லது அமெரிக்காவின் உதவியுடன் சர்வதேச விமானத்துறையாக மாற்றியமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

பலாலி விமானத்துறையின் ஓடுபாதையை மயிலிட்டிக் கடற்கரைவரை விஸ்தரிப்பதற்காக இப்பிரதேசத்திலுள்ள காணிகளை இலங்கை அரச விமானப்படை சுவீகரித்துள்ளது இக்காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கென அரசு இரண்டு கோடி ஐம்பது லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. அரச விமானப்படையினால் சுவீகரிக்கப்பட்டுள்ள சாணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் வேலைகள் இவ்வாரத்தினுள் செய்து முடிக்கப்படும் இக்காணிகள் சுவீகரிக்கப்பட்டது தொடர்பான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் இவ்வாரம் வெளியிடப்படும்.

இவ் விஷயம் தொடர்பாகத் தேசிய பாதுகாப்பமைச்சு வெளியிட்ட செய்தியில், பலாலி விமானத்தள விஸ்தரிப்பினல் யாழ் குடாநாட்டின் பெரும்பாகம் இரு துண்டுகளாகப் பிரிக்கப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கைளைத் திட்டமிடுவதற்கு இலகுவாக இருக்கும் என்றும், கடல் மார்க்கமாக வரும் ஆயுதப் படைப்பிரிவுகளின் போக்குவரத்துக்கும் இப்புதிய திட்டம் துணை செய்யுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செய்தியை கொழும்பு சிங்களத் தினசரியான 'திவயின' முன்பக்கத் தலைப்புச் செய்தியாக நேற்று வெளியிட்டுள்ளது

பலாலித் தளத்தை ஒரு முப்படைத் தளமாக விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ள விருப்பதாக இரு வாரங்களுக்கு முன்னர் 'ஈழநாடு' செய்தி வெளியிட்டிருந்தமை வாசகர்கள் அறிந்ததே. [ஷ]

## மக்கள்வங்கி வட கிளைகள் நேற்று இயங்கின

(யாழ்ப்பாணம்)
மக்கள் வங்கியின் வடபகுதிக் கிளை அலுவலகங்கள் நேற்றுத் திறக்கப்பட்டுக் கருமங்கள் நடைபெற்றன.

வடபகுதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்த நகைகளை மீளத்தருமாறு கோரி, கடந்த பல மாதங்களாக அடகுவைத்தோர் சங்கத்தினர் மறியல் போராட்டம் நடத்தி வந்ததால் மக்கள் வங்கி மூடப்பட்டிருந்ததும், அடகு நகைகள் வழங்கப்படும் என எழுத்து மூலமாக அதிகாரிகள் உறுதி அளித்ததன்பேரில் நேற்றுத் தொடக்கம் மறியல் போராட்டம் இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

புத்தாண்டை முன்னிட்டு, மக்கள் வங்கி மூலம் ஒய்வூதியப்பணம் பெற்றுவந்தவர்களுக்கான காசோலைகள் நேற்று வழங்கப்பட்டதாக வங்கி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். [மா]

## அன்னையர் முன்னணி சுயமாக இயங்கும்

(யாழ்ப்பாணம்)
அன்னையர் முன்னணி தனது கொள்கைகளுக்கு அமைய வேறு எந்தவொரு அமைப்புடனும் சேராது தனித்து இயங்குவது எனத் தீர்மானித்துள்ளதாக அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி ரி. குணநாயகமும், செயலாளர் திருமதி ஜி. பாலசிங்கமும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## விருச்சிகத்திற்கு அருகில் இன்னுமொரு 'வால்வெள்ளி'

(கொழும்பு)
கடந்த மூன்று நாட்களாகத் தென்மேற்கு வானத்தில் ஹலீ வால் வெள்ளியை யொத்த பிறிதொரு 'வால் வெள்ளி' விருச்சிக நட்சத்திரத்துக்கு அருகில் தென்படுவதாகக் கலாநிதி சுனில் வீரரத்ன தெரிவிக்கிறார்

இந்தப் புதிய 'வால் வெள்ளி' மேற்கை நோக்கி நகருவதாகவும் கலாநிதி வீரரத்ன மேலும் தெரிவித்துள்ளார். [ஷ]

## லண்டனில் 'கலைமாலை'

கொழும்பு)
புத்தாண்டை முன்னிட்டு 'கலைமாலை' என்னும் கலை நிகழ்ச்சியொன்றை லண்டன் படிங்டனில் நடத்துவதற்கான ஒழுங்குகளை தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (பி)

## ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

[கொழும்பு]
இடமாற்றம் கோரி விண்ணப்பித்த நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் சேவை நேக்கு அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

வெளி மாவட்டங்களில் நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்த ஆசிரியர் ளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன

இவர்களுக்கான இடமாற்றங்கள் அடுத்த மாதம் முதல் அமுழுக்குவரும் என நம்பப்படுகிறது. (பி)

## துறையூர் வித்துவான் காலமானார்!

(சென்னை)
பிரபல கர்நாடக சங்கீத வித்துவானும் தியாகராஜா கீர்த்தனைகளைப் பிரபல்யப் படுத்தியவருமான துறையூர் ராஜகோபாலசர்மா தமது 81வது வயதில் நேற்றுக் காலை சென்னையில் அவரது இல்லத்தில் காலமானார். (பி)

## இளைஞர் சூட்டுக்குப்பலி!

(வவனியா)
கொந்தகரைக் குளப்பகுதியிலிருந்து ஓமந்தைக்கு நடந்து சென்ற இரு இளைஞர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானுர். மற்றவரின் நிலை பற்றித்தெரியவில்லை.

[5ம் பக்கம் பார்க்க]

## தடை முகாம்களில் முகமூடிகள்: பிரயாணிகள் அச்சம்

[யாழ்ப்பாணம்]
வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள தடை முகாம்களில் வைத்து வாகனங்கள், பிரயாணிகள் சோதனைக்குட்படுத்தப்படும்போது, ஆயுதப்படையினருடன் 'முகமூடி'களும் நடமாடுவதாகத் தெரியவருகிறது அதனல்சோதனை நடைபெறுவதற்கு அதிக நேரம் எடுக்கிறதென்றும், பிரயாணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகவும் கூறப்படுகிறது.

ஆனையிறவு தடைமுகாமில் நேற்றுப் பரிசோதனைக்காக வாகனங்களிலிருந்து பிரயாணிகள் இறங்கிக்கொண்டிருந்த சமயம் முகமூடி அணிந்த ஒருவர் தலைஆட்டும் சம்பவம் இடம்பெற்றது.

இதனைக்கண்டு பிரயாணிகள் பெரும் பீதியடைந்தனர். சோதனைக்குட்படுத்தப்பட்ட பிரயாணிகளில் சிலர் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப் பட்டதாகவும் தெரியவருகிறது. (ஒட்டு. நி. மு.)

## இந்த ஆசிரியர்களுக்கு அனுமதி கிடைத்தது

(யாழ்ப்பாணம்)
ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவுசெய்யப்பெற்ற சில பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குக் கலாசாலை செல்வதற்குக் கல்விப்பணிப்பாளர்கள் அனுமதி கொடுக்க மறுத்தனராம். இதனல் இ. த. ஆ சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த மகாசிவம் கல்வி அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்து பேசியதைத்தொடர்த்து மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களைக்கலாசாலைகளுக்குச் செல்வதற்கு அனுமதிகிடைத்துள்ளது

ஆசிரியர்பற்றுக்குறை காரணமாகவே மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களைக் கலாசாலைகளுக்கு அனுப்புவதற்குச் சில கல்விப்பணிப்பாளர்கள் அனுமதிகொடுக்க மறுத்தனராம்

கலாசாலைக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களை மாவட்டத்திற்குள்ளான இடமாற் (8-ம் பக்கம் பார்க்க)

## 'புத்தாண்டுப் பரிசு!'

[கொழும்பு]
கொழும்பில் 17 பொலிஸ் பிரிவுகளில் சுமார் 300 பேரை பொலிஸார் கைதுசெய்து, புத்தாண்டுமுடியும்வரை தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

புத்தாண்டுதினத்தில் நாட்டில் அமைதிகாக்கும் பொருட்டே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம். (பி)

## 'ரெலோ' தலைவரின் எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)
''தமிழீழப்போராட்டத்தின் முனைப்பாகக் கடல் கண்ணிவெடிகள் வைக்கப்படுவதால் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கைக் கடற்கரையைநெருங்கி சிக்கலுக்குள்ளாகக் கூடாது'' என்று தமிழீழ விடுதலைச் கழகத் (ரெலோ) தலைவர் திரு ஸ்ரீசபாரத்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் எச்சரித்துள்ளார். (பி)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு பின்புறமாக வீடு கட்ட சகல வசதியும் அமைக்கக்கூடியபரப்பும், தாளையடி றோட்டில் வல்லிபுரக்கோவிலுக்கு அண்மையில் சகல வசதியுமுள்ள வீடுகட்டவும், தொழிற்சாலை அமைக்கக்கூடியதுமான காணியும் விற்பனைக்கு உண்டு. தரகர்மார் தேவையில்லை. தொடர்பு: இராசேஸ்வரி, சாத்திரியார் வீடு, கிராமக்கோட்டடி, புலோலி. (C 1644)

நாஷனல் கலர் T. V. 14'' புதியது. மினிசினிமாவுக்கான 42'' லென்ஸ் (Made in Japan) Beam Scope, Brother தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்) புதியது விற்பனைக்கு உண்டு. தொடர்பு; S. ஸ்ரீனிவாசன், 43, நீதிமன்ற வீதி, மல்லாகம். (C 1694)

இந்தியன் பழைய பவுண் மார்க் ஒடு 1000 விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. பத்மநாதன், No 9, மாட்டின் லேன், யாழ்ப்பாணம். (C 1721)

நல்ல இன அல்சேஷியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரட்ணம், 22, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி. [C 1680]

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற்: [1] திருச்செந்தூர் கார்த்திகேய சுப்ரபாதம், ஸ்கந்தஷஷ்டி கவசம், ஸ்கந்த குரு கவசம் [2] சிவபுராணம்- Dr. சேலம் ஜெயலட்சுமி [விருத்தம்], பஞ்சபுராணம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C 1717]

மறுசீரமைக்கப்பட்ட Honda C 90 விற்பனைச்குண்டு. 88 சிறீ இலக்கம். விலை ரூபா 6500/- தொடர்பு: சாந்தி சினிமா முன்பாக பாலகன் வீடியோ சென்டர், யாழ்ப்பாணம். மாலை 4 - 6 மணி வரை பார்வையிடலாம். (C 1703)

வீட்டுத் தளபாடங்கள், Imported Beds, மெத்தைகள், கண்ணாடி மேசைகள், கசற் றேடியோ, Electrical Cookers, Ice Flask, Hitachi குளிர்சாதனப் பெட்டிகள், றெடிமேட் உடுப்புகள், எழுதுமேசைகள், கிளாஸ் வகைகள், Tea Sets, Formica சாப்பாட்டு மேசைகள், Verandah Chairs, பிரம்பு கதிரைகள், பெரியமரம்அரியும் வாள், மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கிடையில். (C1702)

இரண்டு கிறைன்டிங் மில், இரண்டு மோட்டார், ஒரு அல்லர் விற்பனைக்குண்டு. M. தயாளநிதி, மல்லிகா ஸ்ரோர்ஸ் அருகே, ஆவரங்கால். [C 1678]

இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரிகளுக்கு மிக அண்மையில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. இக்காணி வாங்குபவர்களுக்கு கடன்வசதிசெய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும்: ஹரிஹரன் என்ரபிறைஸ், [பரமேஸ்வராச்சந்தி], 337, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C1645)

## பயிற்சி

Computer Programming Basic and Cobal ரெலிவிஷன், ரேடியோ, வீடியோ, டெக் ரெக்னோலஜி, எலக்ரிக்கல் வயறிங், வைண்டிங் வகுப்புக்கள் கூடிய நேரசெய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. ஆரம்பம்: 12-4-86 காலை 9-30. விபரங்கட்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி றோட், (றெயில்வே கடவைக்கருகாமை), யாழ்ப்பாணம். C 1643

## கல்வி

க. பொ. த. [உயர்தர] 88 கலை/வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Center, Karaveddy. [C-1669]

## வகுப்புகள்

A/L 88 க்கான விஞ்ஞான வகுப்புக்கள், ஆரம்பம். நிறுவனத்தின் வழமையான பிரபல ஆசிரியர் குழு, திருவாளர்கள்:- மகாதேவா, பத்மநாதன், சிவவீரசிங்கம், சிறீதரன், குணசிங்கம். நேரசூசிகை, மற்றும் கலை வர்த்தக வகுப்பு விபரங்கள் யாவும் நிறுவனத்தில் பெறவும். நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட், நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு. (C 1701)

## தவறிவிட்டது

ராஜசுந்தரம் மகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (C 1709)

யோகம்மா மைக்கல் என்பவருடைய 325561882 இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும் :15/10, சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம். [C1715]

## வாடகைக்கு

தும்பளை பருத்தித்துறையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இல. C- 1666 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-1666]

## தேவை

பிரபல நிறுவனமொன்றில் பகுதி நேரம் வெளிக்கள வேலைகளையும் மிகுதிநேரம் அலுவலக வேலைகளையும் கவனிப்பதற்கு, ஏற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தட்டச்சு கணக்குப் பதிவு அனுபவம் விரும்பப்படும்; ஆனல் அத்தியாவசியமல்ல. யாழ். நகருக்கு அண்மையில் வசிப்பவர்கள் மட்டும் 17ம் தேதிக்கு முன் முழுவிபரங்களோடு விண்ணப்பிக்வும். Dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [A 574]

## காணவில்லை

தம்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சண்முகலிங்கம் என்பவர் [28 வயது] கடந்த 26-3-86 தொடக்கம் காணவில்லை. இவர் புத்துவெட்டுவான் நீர்ப்பாசன இலாகாவில் கடந்த ஐந்து வருடங்களாக பணிபுரிந்து வருகின்றார். இவரைப் பற்றிய தகவலை அறியத்தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: கொள்ளும் முகவரி, திரு மு. கந்தசாமி, பண்டாரி அம்மன் கோவிலடி, தம்பசிட்டி, பருத்தித்துறை. [C 1719]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை

[தாமோதரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் மன்னர்]

தோற்றம்: 15-8-1921

இறைவனடி: 13-3-1986

திதி: 12-4-1986

ஆள்பவனின் கூலிப் படை எமது இனத்தை ஆயிரமாயிரமாய் அழிப்பது போதாது என்று ஆண்டவனே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அன்புடனும் பாசத்துடனும் எம் வாழ்வை உயர வைக்க அயராது உழைத்த அன்புத்தெய்வத்தை நீயும் உன் அடிக்கே மீட்டுக் கொண்டாய் தந்தையே! மரணம் தவிர்க்கமுடியாதது என்பதை மனம் புரிந்து கொள்கிறது. ஆனலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எங்கள் இதயங்கள் ஏங்குகின்றன. உங்கள் ஆத்மா சாந்திக்காக எங்கள் உயிர் உள்ளவரை ஆண்டவனைப் பிராத்திக்கின்ருேம்.

இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 12-4-86-ல் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் கலந்துகொள்ளுமாறு யாவரையும் அன்புடன் வேண்டுகின்ருேம்.

அன்பு மனைவி, சகோதரங்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சிவசுந்தர பதி', தாவடி வடக்கு, கொக்குவில். (C1662)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### மருத்துவ பீடத்திற்கு மரத்திலான பரிசோதனைக்கூட தளபாடங்கள் வழங்குதலும் பொருத்துதலும் (2-ம் மாடி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ரூபா 1,000 000/- பெறுமதியான மரத்திலான பரிசோதனைக் கூடத் தளபாடங்கள் வழங்குவதற்கும், பொருத்துவதற்கும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. அளவுகள், மாதிரி வரைபடங்கள் ஆகியவற்றை பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளரிடமிருந்து 25-04-1986ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

விபரங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 200/-க்கு தபாற்கட்டளை/காசுக் கட்டளை அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கானமுடிவுத் திகதி: 30-4-1986 பிற்பகல் 2-00 மணி ஆகும்.

பதிவாளர்.

(A569

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

நடராசாவும் சபாநாதனும். மனுதாரின் சட்டத்தரணிகள்.

இல: தத்துவம்/143

தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் இல: 10, இராசவல்லி ஒழுங்கை, கொழும்பு-6 இல் வசித்த இளையதம்பி இராசையா கைம்பெண் தேவநாயகி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

-மரணமெய்தியவர்.

சுப்பிரமணியம் நாகலிங்கம் தெல்லிப்பழை தற்போது இல; 10. இராசவல்லி ஒழுங்கை, கொழும்பு-6.

மனுதாரர்.

மேலே குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகித்து தத்துவம் பெறுவதற்காக இம்மன்றில் குறித்த மனுதாரர் விண்ணப்பம் செய்துள்ளார் என்றும் அந்த விண்ணப்பத்திற்கு அமைய பின்முற்ருக்குங் கட்டளை இம்மன்றினல் பதியப்பட்டுள்ளது என்றும் இவ்விடயத்தில் அக்கறையுள்ளவர் எவராக இருப்பினும் இம்மன்றில் 1986-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி காலை 9 மணிக்கு தோன்றி தகுந்த காரணம் எதுவும் இருப்பின் அவற்றைத் தெரிவிக்காவிட்டால் குறித்தமரணமெய்தியவரின் சொத்துக்களின் நிர்வாகத் தத்துவப்பத்திரம் மனுதாருக்கு வழங்கப்பட்டு கட்டளை பூரணமாக்கப்படுமென்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

1986-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்.
பதிவாளர்
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

[C 1688]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



முருகப்பர் தம்பிப்பிள்ளை (பாலசிங்கம்)

மண்ணகம்: 05-02-1919

விண்ணகம்: 13-03-1986

திதி: 12-04-1986

எங்கள் நல்வாழ்க்கைக்காக எரியும் விளக்காக வாழ்நாள் பூராக எங்களுக்காக ஓயாது உழைத்து எங்கள் இல்லத்தில் எங்கள் மனதில் அணையாத தீபமாக ஒளி வீசிய 'எங்கள் அன்பு அப்பாவே' நீங்கள் காட்டிய பாதையில் நாம் வளர்ந்து உங்கள் ஆசைகளை நிறைவேற்றி உங்களுக்கு ஆறுதல் தரக்காத்திருக்க, எங்களைத் தவிக்கவிட்டுத் திடீரென இறைவனடி சேர்ந்துவிட்டீர்! நம்பவே முடியவில்லை. ஆறுதலின்றித் தவிக்கின்ருேம் அப்பா! உங்கள் பிரிவால் உளம் உருகும் அன்பு மனைவி, மனம் கலங்கி ஏங்கித் தவிக்கும் அருமைப் பிள்ளைகள் செய்வதறியாது திகைக்கிருேம். எங்களுடன் இருக்கும் போது எங்களுக்கு எவ்வாறு நல்வழி காட்டினீரோ அதேபோல் எங்கள் வாழ்நாள் பூராக எங்களுடன் இருந்து நல்வழி காட்ட வேண்டுகிருேம் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்

எங்கள் அப்பாவின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் சரீர உதவிகள் புரிந்தவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

இத்துடன் அப்பாவின 12-04-1986 சனிக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் உற்ருர், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிருேம் இதனையே அழைப்பிதழாக தயவு செய்து அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்பு மனைவி:
த. தங்கரத்தினம்,
அருமைப்பிள்ளைகள்:
1 த. சிவகுமார் [இலிகிதர்மக்கள்வங்கி, வவனியா],
2. த சந்திரகுமார் [ஆசிரியர், ஹாலி எல அல்-இர்ஷாத் முஸ்லீம் மகாவித்தியாலயம்; ஈழநாடு பத்திரிகை பதுளை நிருபர்],
3. த. சிவசக்தி.

வட்டுக்கிழக்கு, சித்தங்கேணி. (C1720)

## டுவாலியர், மார்க்கோஸ் போன்று

# பாகிஸ்தானின் ஸியாவுல் ஹக்

# பதவி நீக்கப்படவேண்டும்!

### லாகூரில் பெனுஸிர் கோஷம்!!

லாகூர் ஏப். 11

**"ஹெய்ட்டித்தீவின் டுவாலியர், பிலிப்பைன்ஸின் மார்க்கோஸ் போன்று பாகிஸ்தானின் ஸியாவுல் ஹக்கும் பதவிநீக்கம் செய்யப்படவேண்டும். பாகிஸ்தானில் மக்கள் ஆட்சிமுறை கொண்டுவரப்பட வேண்டும்." என்று நேற்றுமுன்தினம் லாகூர் வந்தடைந்த பாகிஸ்தான் முன்னுள் ஜனதிபதி சுல்பிகார் அலிபூட்டோவின் மகள் செல்வி பெனுஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவியான செல்வி பெனுஸிர் பூட்டோ கடந்த இரு வருடகாலங்கள் தாமாகவே மேற்கொண்ட அஞ்ஞாத வாசத்தைத் தொடர்ந்து பிரிட்டனிலிருந்து நேற்று முன்தினம் தாயகம் திரும்பினுர்.

ஒருபத்திரிகையாளரான இவர், ஏழுவருடங்களுக்கு முன்னர் தமது தந்தையார் ஜெனரல் ஹக்கினுல் தூக்கிலிடப்பட்டதை தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினுர்.

லாகூர் விமான நிலையத்தை செல்வி பெனுஸிர் பயணஞ் செய்த 'பாகிஸ்தான் ஏயர் லைன்ஸ்' விமானம் நேற்றுக்காலை 7 மணியளவில் வந்தடைந்தது.

விமானநிலையத்தில் ஆயிரக்கணக்கான மக்கள்கட்சி ஆதரவாளர்கள் திரண்டு நின்றனர். இவர்கள் பங்கிஸ்தானின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் அங்கு வந்து கூடியிருந்தனர்.

இம்மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த கலகமடக்கும் பொலிஸார் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆயினும் அவர்களால்கூட மக்கள் ஆரவாரத்தையும் நெரிசலையும் கட்டுப்படுத்தமுடியவில்லை.

விசேட ட்ரக் வண்டியொன்றில் செல்வி பெனுஸிர் பூட்டோ லாகூர் விமான நிலையத்திலிருந்து லாகூர் நகர மையத்துக்கு ஊர்வலமாகக் கூட்டிச் செல்லப்பட்டார். எட்டுமைல்தூர இவ்வூர்வலம் சுமார் 10 மணி நேரம்வரை மக்கள் கூட்டம் மத்தியில் இடம் பெற்றது.

இறுதியாக லாகூர் நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: "பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஹக் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும். எனது தந்தையின் மரணத்துக்குப் பழிவாங்க நான் பாகிஸ்தான் வரவில்லை. எனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இங்கு வந்துள்ளேன்.

ஜெனரல் ஸியாவின் எத்தகைய அரசியல் சவால்களுக்கும் முகங் கொடுக்கத் தயாராகவுள்ளேன். அவர் பதவி விலக வேண்டும்" என்று கோஷமிட்டார்.

இவரைத் தொடர்ந்து அக்கூட்டத்திலிருந்த லட்சக்கணக்கான மக்கள் 'ஸியா பதவி விலக வேண்டும்' என்று கோஷமெழுப்பினர், [கி]

உலகச் செய்திகள்

## இத்தாலிய வைன் கலப்படம்

# 20 பேர் மரணம்!

ரோம், ஏப் 11

இத்தாலிய 'வைன்' மதுபானத்தில் செய்யப்பட்ட கலப்படமொன்றையடுத்து 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

இக்கலப்படம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சர்வதேச புகழ்பெற்ற 'இத்தாலிய வைன்' பானங்களுக்கு அவப்பெயர் கிடைத்துள்ளது இத்தாலிய அரசும் இந்த வைன் ஏற்றுமதியைத் தடைசெய்துள்ளது.

கூடவே கலப்படம் செய்யப்பட்ட 'வைனைத்' தயாரித்த நிறுவனம் மீதும சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறுகியகால வழியில் லாபமடைய முற்பட்ட சட்ட விரோத சக்திகளின் நடவடிக்கையே இந்த 'வைன்' கலப்படமென்று இத்தாலிய அரசு தெரிவித்துள்ளது.

பல நூற்றாண்டு காலமாக இத்தாலிய 'திராட்சைவைன்'கள் உலகப்புகழ் பெற்றவையாக விளங்கின. தற்போது இவற்றில் செய்யப்பட்டுள்ள கலப்படத்தையடுத்து இவற்றின் தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு சர்வதேச பிரபல்யத்தையும் இவை இழந்துள்ளன என்று கூறப்பட்டது [கி]

## இஸ்ரேலிய கூட்டு அரசாங்கத்தில் நெருக்கடி!

ஜெருசலம், ஏப் 11,

இஸ்ரேலிய கூட்டு அரசாங்கத்தில் நெருக்கடி நிலை தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் திரு. ஷிமொன் பெரஸ், நிதியமைச்சர் திரு யிட்ஷாக் மொராயின் கண்டனத்துக்குள்ளானதையடுத்தே இந்த நெருக்கடி தலைதூக்கியுள்ளது.

இஸ்ரேலிய கூட்டரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை நிதியமைச்சர் சாடியுள்ளார்.

இப்புதிய நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் தற்போது கூட்டுச் சேர்ந்திருக்கும் இஸ்ரேலிய முன்னுள் பிரதமரும் தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான திரு. யிட்ஷாக்ஷமீரும் இஸ்ரேலிய பிரதமர் திரு பெரசும் பேச்சுக்களை நடத்தியுள்ளனர் என்று ஜெருசலம் வட்டாரங்கள் தெரிவித்தன. [கி]

## நெவாடா பாலைவனத்தில்

# அமெரிக்காவின் 758-வது அணுசக்தி பரிசோதனை!

லண்டன், ஏப் 11

கடந்த செவ்வாய்க்கிழமை ஒத்திவைத்த அணுசக்திப் பரிசோதனையை அமெரிக்கா நேற்று நெவாடா பாலைவனத்தில் நடத்தியது.

இப் பரிசோதனை நெவாடாவில் அமெரிக்காவினுல் மேற்கொள்ளப்பட்ட 758வது அணுசக்திப் பரிசோதனை என்று தெரிவிக்கப்பட்டது.

கிறீன்பீஸ்காரர்களின் நெவாடா பாலைவன ஊடுருவல், தொழில்நுட்பக் கோளாறு, சீரற்ற காலநிலை என்பன காரணமாக இந்த அணுசக்திப் பரிசோதனை கடந்த மூன்று தினங்களாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இறுதியாக அமெரிக்கா இந்த ஆண்டின் அதன் இரண்டாவது அணுசகதி பரிசோதனையாக நிலத்தடியின் கீழ் நேற்றைய அணுசக்தி வெடிப்பை மேற்கொண்டது.

நேற்றைய பரிசோதனையின் போது வெடிக்க வைக்கப்பட்ட அமெரிக்க அணுகுண்டின் அளவு ஹிரோஷிமாவில் போடப்பட்டதைவிட 10 மடங்கு அதிகமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத்யூனியன் இந்த அணுசக்திப் பரிசோதனையை வெகுவாகக் கண்டனம் செய்துள்ளது அமெரிக்கா தனது வேண்டுகோளைப் புறக்கணித்து வருவதாகவும் சோவியத் குற்றஞ்சாட்டியுள்ளது. [கி]

## ஜனதிபதித் தேர்தலில்

# காலூன்ற வால்ட்ஹெய்ம் படாதபாடு!

லண்டன் ஏப் 11

முன்னுள் ஐ நா செயலாளர் திரு ஹேர்ட் வால்ட்ஹெய்ம் தமது நாட்டின் ஜனதிபதித் தேர்தலில் காலூன்றும் வகையில் கடுமையாகப் பாடுபட்டு வருகிறுர்.

திரு வால்ட்ஹெய்ம் ஒரு முன்னுள் 'நாஸிப்படை ஊழியர் என்று சர்வதேச யூத சம்மேளனம் குற்றஞ்சாட்டியிருந்தது இக்குற்றசசாட்டையடுத்தே திரு. வால்ட்ஹெய்ம் தம்மை அப்படியானவரல்ல என்று நிரூபிக்கப் படாதபாடு பட்டு வருகிறுர்.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த திரு. வால்ட்ஹெய்ம் அடுத்த மாதம் இந்த நாட்டின் ஜனதிபதித் தேர்தலில் குதிக்கவுள்ளார்.

இவர் நேற்று ஆஸ்திரிய தொலைக்காட்சிச் சேவையில் தோன்றி தம்மீதான குற்றச்சாட்டுக்களைமறுத்துரைத்தார்

ஆஸ்திரிய ஜனதிபதித் தேர்தலில் தாம் குதிப்பதை விரும்பாத தமது எதிரிகளே மேற்குறிப்பிட்ட பிரசாரத்தைச் செய்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (கி)

## இடமாற்றம்

(சுண்டுக்குளி

யாழ்.காணிப் பதிவகத்தில் லிகிதராகக் கடமையாற்றிய திரு வெ நவரத்தினம் இம்மாதத்தில் இருந்து யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். அத்துடன் யாழ் விவாகப் பதிவாளராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

## தாமதமின்றி கிடைக்கும்

[சுண்டுக்குளி]

யாழ். பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகத்தில்பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு தற்போது 1 வாரத்தில் கிடைக்கக்கூடியதாக உள்ளது. இதன் பிரகாரம் இலக்கம் தெரியாத 'ஏ' விண்ணப்பங்கள் 1வாரத்திலும், 'பி' விண்ணப்பங்கள் 3 வாரத்திலும் கிடைக்கின்றன. இக்காரியாலயத்தில் முன்பு தினமும் 500 க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்து வந்தன. தற்போது இவை நாளொன்றுக்கு200 விண்ணப்பங்களாகக் குறைந்துள்ளன.

## சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

(கொழும்புத்துறை)

யாழ், மாவட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்களத்தினுல் புதிதாகப் பதினெரு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பதினுறு உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக இவர்கள் நியமனம்செய்யப்பட்டுள்ளனர். புதிய சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு;-

ஆ. ரகுநாதன் (யாழ்ப்பாணம்-வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்), செல்வி செல்வமலர் கணேசன் (பருத்தித்துறை உ. அ. அ. பிரிவு), செ. தவநாயகம் சாவகச்சேரி உ. அ. அ.பிரிவு] வெ. சுப்பிரமணியம் [கோப்பாய் உ. அ அ. பிரிவு], வே. கந்தசாமி (தெல்லிப்பழை-உடுவில் உ. அ. அ பிரிவு] ஜெ ஜெயராஜ் (நல்லூர்-கிளிநொச்சி உ அ. பிரிவு], க. இராமச்சந்திரன் [கரவெட்டி-நெடுந்தீவு உ அ. அ. பிரிவுகள்], அ விஜயநாதன் [சங்கானை-பூநகரி உ. அ. அ பிரிவுகள்], ம சரவணபவ ஐயர் [கண்டிலிப்பாய்-ஊர்காவற்றுறை உ. அ. அ பிரிவுகள்], செல்வி மகேஸ்வரி [பளை உ. அ அ பிரிவு].

திருமதி த. பாஸ்கரன் தலைமைக் காரியாலய சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அடையாள வேலை நிறுத்தம்: அவசரசிகிச்சை பாதிப்பில்லை

(புலோலி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் தாதிகள் அண்மையில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்திலீடுபட்ட போதும் பருத்தித் துறை மாவட்ட அதிகாரி டாக்டர் கே. லலித்குமாரின் உத்தியோகப் பற்றற்ற வேண்டுகோளுக்கிணங்க அவசர சிகிச்சைகளை மேற்கொண்டு ஒத்தாசைவழங்கிய தாதிமாருக்கு மாவட்ட வைத்திய அதிகாரி நன்றி தெரிவித்துள்ளார்

இவ் வைத்தியசாலையில் பற்சிகிச்சை ஊசிமருந்திற்காகஒவ்வொரு நோயாளியிடமும் தலா இரண்டு ரூபா பணம் அறவிட்டு வந்த நடைமுறை உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென உத்தரவிடப் பட்டுள்ளது.

[5ம் பக்கம் பார்க்க]



(A-433)

### மணி வாக்கு

பொருள் பெருக்க எண்ணுகிறவர்கள்
கிடைத்த பொருளை வறியவர்களின்
பசியாகிய நெருப்பில் ஓமஞ்செய்து
அவர்கள் வயிற்றிலே சேமிக்கவேண்டும்
அந்தநிதி எந்தக் குளத்திலேயும் எடுக்கலாம்
கை நீட்டவரும்.

— பண்டிதமணி
கணபதிப்பிள்ளை

# நமது நோக்கு

## பாகிஸ்தான்:

### மகள் தந்தைக்காற்றும் உதவி?

இறவாத உண்மைகளைச் சரிவரக் கடைப்பிடித்து வாழ்பவர்களை எவரும் கெடுத்துவிட முடியாது. அவர்கள் மனத்தை எவரும் கலைத்துவிட முடியாது. அவர்களை விலைகொடுத்து எவரும் வாங்கிவிட முடியாது; அவர்களை விற்பனைச் சரக்காக்க என்றும் முடியாது.

இந்த உண்மையின் ஆழத்தை அளப்பது நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்ப்பது போலிருக்கும்; ஆனால் பத்திரிகையாளர்களாகிய நாம் ஓரளவிற்காவது இதனை உணர்ந்தாக வேண்டும்; இன்றேல், அரசுகள் மட்டுமல்ல அவற்றைக் கவிழ்க்க முயலும் தீய சக்திகளும் தங்கள் வெற்றிக்கு இச்சாதனத்தை துஷ்பிரயோகம் செய்யத் தயங்கமாட்டா.

இன்று கொழும்பிலிருந்து வெளிவரும் அரச சார்பான பத்திரிகைகள் இந்த உண்மைக்குப் புறம்பான முறையில், மக்களுக்கிடையே பகைமையைத் தூண்டிவிடும் செய்திகளுக்குப் பிரபலம் கொடுக்கின்றன.

இலங்கையில் நடைபெறுவது சிங்கள-தமிழ்உள் நாட்டுப் போர் என்ற பாணியில் அதற்கு உக்கிரமளிப்பதோடு நில்லாமல், ஆட்சிக்கு வெற்றிதேடப் பத்திரிகையே தஞ்சமென்ற கருத்தையும் சொல்லாமற் சொல்லுகின்றன.

தமிழ்ப் போராளிகள் தங்களுக்குள் சண்டை; இந்தியா சென்ற அகதிகள் ஏமாற்றமடைந்து நாட்டுக்கு வந்து குவிகின்றனர்; கொள்ளைகள் கொடுமைகளால் யாழ்ப்பாண மக்கள் போராளிகளை எதிர்க்கின்றனர்; தாதிமார் பெருமளவில் வேலைக்குத் திரும்பிவிட்டனர்; இவ்வாறு பச்சைப் பொய்களை நாம் அடுக்கிக் கொண்டு போகலாம்.

இவற்றைப் படித்து நம்பி நாட்டின் உண்மைநிலை அறியாத மக்கள் திசை திருப்பப்படுகின்றார்கள். இந்த நிலை மக்கள் ஆட்சியில் நீண்டகாலம் இடம்பெறுவது எவ்வாறு முடியும்?

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகைகள், தாம் நினைத்தவாறு எழுதலாம் என்ற கிண்டல் கருத்தைப் பாதுகாப்பு அமைச்சர் வழங்கியிருக்கிறார். இது நாம் இங்குள்ள மக்களுக்கு உண்மைக்குப் புறம்பான செய்திகளையோ, வியாக்கியானங்களையோ பரப்புகின்றோம் என்ற கருத்துடைய தாகும்.

தணிக்கை உண்டோ இல்லையோ, தம்மைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுண்டானால் செய்திகளைத் திரியாமல், அவற்றின் கருத்துக்களை இயன்றளவு நடுநிலைமையில் நின்று ஆராய்வது எமக்கு நீண்டகாலப் பழக்கமாகிவிட்டது.

நித்தம் நிகழும் அப்பாவி மக்கள் கொலை எவ்வகையிலும் நிறுத்தப்படவேண்டுமென்பதே எமது தினசரி பூசையும், பிரார்த்தனையுமாகும்?

இன்று தலைநகரிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் நடைபெறும் சாதாரண சம்பாஷணை அரசின் அணுகுமுறையைப் பிரதிபலிக்கும்; ''இன்றைய ஸ்கோர் (Score) என்ன?'' என்பது வினா. கிரிக்கட் அல்ல, போரின் இருபக்கங்களில் மாண்டவர் தொகை. அரிதாகக்கிடைத்த மானிடப் பிறவி இன்று புள்ளி விபரத்துக்குப் பலியாகிறது.

சகோதரர் சகோதரரைக் கொல்ல எந்த தீய சக்திகள் உதவினாலும் அது கண்டனத்துக்கு உரியது. உலக அபிப்பிராயம் அதனை தடுக்க உதவவேண்டும். இன்று பாகிஸ்தானும் இஸ்ரேலும் ஒன்று சேர்ந்து இலங்கை இராணுவத்துக்கு உதவுவதானால் அதனை என்னென்று வர்ணிப்பது.

சாதாரண மக்கள் திட்டிக்கண்ணீர்விடுவதை தவிர வேறென்ன செய்யமுடியும்?

''சாக் நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் மூன்று நாடுகள் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை எடுத்த எடுப்பிலே இரண்டாய் பிரிந்து இந்தியாவுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் எதிராக பாகிஸ்தானும் இலங்கை அரசும் ஐக்கியப்பட்டிருப்பது மெய்யானால் இறைவன்தான் எம்மைக் காக்கவேண்டும். இது ஒரு விரக்தியடைந்த நிலையில் வேண்டப்படும் வரமல்ல.

வரலாற்றில்எத்தனையோ முக்கிய திருப்பங்கள். ஒரு சாதாரண சம்பவத்தால் ஏற்படுகின்றன. பாகிஸ்தான் மக்கள் ஒரு ஜனநாயக ஆட்சிமுறையை நாடுகின்றனர். அமெரிக்காவின் ஏவலாளி என்றவகைக் குள்ளான பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவின் ஆட்சியில் இதனை நிறைவேற்றுவது கடினம்.

பாகிஸ்தான் மக்கள்கட்சி (PPP)ராணுவ வெடுக்கடிக்கும் ஸியா ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைகின்றது. அதற்குத் தலைமை தாங்க, இரண்டு வருட அஞ்ஞாதவாசம் முடித்துக் கொண்டு இன்று லாகூரில் பெருத்த வரவேற்புக்குள்ளான பெனாஸிர் பூட்டோ வந்திறங்கியிருக்கிறார்.

தந்தை - கொலைசெய்யப்பட்ட ஜனாதிபதி பூட்டோவின் அரசியல் எவ்வகையிலும் புனிதமானதென்று நாம் கருதவில்லை. ஆனால் அன்று இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் ஒருவரைத் தவிர உலகத் தலைவர் அனைவரும் அவருடைய உயிருக்கு மன்றாடியதைப் பொருள்படுத்தாது 1979 ஏப்ரில் மாதம் மிக ரகசியமான முறையில் தூக்கிலிடப்பட்டார். தந்தையின் ஆவி மகளுக்கு ஏழுவருடங்களுக்குப்பின் எவ்வகையில் உதவுமென்பது இருந்து பார்க்கவேண்டிய விடயம்.

இலங்கையைப் பொறுத்தளவில் பெனாஸிர் பூட்டோ ஜனாதிபதி ஸியாவுக்குப் போதிய தொல்லை கொடுத்தால் இங்குள்ள நிலைமை இலகுவாகலாம்.

## மட்டுவில் தந்த பரோபகாரி பண்டிதமணியின்

# கந்தபுராண உரையை ஓதி உய்வோமாக!

### பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம்

மட்டுவில் ஒரு சிறிய கிராமம். எனினும் அது பெருமை மிக்கது. இப் பெருமைக்குக் காரணங்கள் பல உள்ளன. இங்கு சந்திரமௌலீச்சுரர் திருக்கோயில் கொண்டெழுந்தருள் புரிகின்றார். ஐரோப்பியர் படையெடுத்து வந்த காலம் முதல் பெரிதும் அஞ்சியும் அப்படையெடுப்பையடுத்து எமது நாட்டுட் புகுந்து வஞ்சகச் செயல்கள் புரிந்த வேற்றுநாட்டு மதாச்சாரியர்களின் சூழ்ச்சியாலும் உபதேசத்தாலும் இலவசக் கல்வியாலும் வேறு சலுகைகளாலும், மயக்கமுற்றும், எமது வாழையடி வாழையாக வந்த கந்தபுராண கலாசாரத்தை நாம் முற்றிலும் இழக்க இருந்த காலத்தில் எமது கிராமங்களுள் மட்டுவில் ஒன்று மட்டுமே, யாதும் அஞ்சாது. மயக்கமுறாது, சைவத்தையும் தமிழையும், சுருங்கக் கூறின், எமது கலாசாரத்தைப் பேணி வளர்த்து வந்துள்ளது பட்டியலொன்று தயாரிக்கப்படின் சதுரமைலுக்குத் தமிழுக்கும், சைவத்துக்கும் அருஞ்சேவை புரிந்த மட்டுவில் பெரியோரின் எண்ணிக்கை எம்மை வியப்புறச் செய்யும். இந்த மண்ணிலே இந்தச் சூழலிலே பண்டிதமணி அவர்கள் அவதரித்துள்ளமை வியப்பன்று. பண்டிதமணி அவர்களுக்கு இலக்கியக் கலாநிதி என்னும் பட்டத்தினை இலங்கைப் பல்கலைக் கழகம் வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளது. ஆனால் உண்மையில் அச்செயலால் பல்கலைக் கழகம் தன்னைத் தானே பெருமைப்படுத்திற்று.

கலாநிதி பண்டிதமணி அவர்களின் இலக்கியப் புலமை பற்றியோ, சைவ அறிவைப் பற்றியோ எழுதுவதற்கும் பாராட்டுவதற்கும் நான் யார்?

பண்டிதமணி அவர்களின் 'சமயக்கட்டுரைகள்' எனப் பெயரிட்ட அரிய நூலினைப் படித்த போது இத்தகைய இறுக்கியிறுக்கி எழுதியுள்ள கருத்துக்கள் பல கண்டு மகிழ்வுற்றேன் எடுத்துக்காட்டாக இவற்றுள் சிலவற்றை இங்கு தருகின்றேன்.

'இராவணன் அழுதான் வாசீர் இரங்கினார்.'

'அவன் குணி: அவள் குணம்'

'காமியம் வேறு; நிஷ்காமியம் வேறு. காமியம் தருமதளத்திற் செய்வது தருமம் திருவருளின் குறிப்பு.

இந்நூலினைப் படித்தபோது எனது பள்ளிக்கூடப் படிப்பு ஞாபகத்திற்கு வந்தது. கேம்பிறிட்ஜ் சிரேஷ்டபரீட்சைக்கு உரோமாபுரி தளபதி ஜூலியஸ் சீசர் என்பான் இலத்தீன் மொழியில் இயற்றிய ''பிரெஞ்சு நாட்டுப் பழங்குடி மக்களின் புரட்சி அடக்கின போர்'' பாடப்புத்தகமாக இருந்தது. இந்தப் புரட்சி நிகழ்ந்த அதேவேளை உரோமாபுரி ஆதிக்கத்தின் கீழிருந்த பிரித்தானியாவிலும் புரட்சியொன்று வெடிக்கலாற்று; அதனை அடக்கும் பொருட்டுத் தளபதி சீசர் அங்கு அனுப்பப்பட்டான். சீசர் வந்த வேலையினை முடித்துக்கொண்டு மெழுகுப்படலமொன்றில் எழுத்தாணியால்

'வந்தேன், கண்டேன், அடக்கினேன்,'

என்ற செய்தியை எழுதியனுப்பினான், இதனைப் பண்டிதமணி அவர்களின் வாக்கியங்களுடன் ஒப்பிடுக. சுருக்கத்திலும் செறிவிலும் தனியழகொன்றின்றே என எமது இலக்கியக் கர்த்தாக்களிடம் கேட்க விரும்புகின்றேன். நூலொன்றிலே எல்லாவாக்கியங்களும் இவ்வண்ணம் சுருக்கமாக அமையவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் அதிமுக்கியமான கருத்தொன்றினைத் தெரிவிக்க வேண்டிய இடத்து பண்டிதமணி அவர்களின் இலக்கியப் படைப்பிலிருக்கிறதுபோல, எவ்வளவு சுருக்கமாக வாக்கியம் அமைகிறதோ அவ்வளவு பலமாகக் கருத்துப்படியும். மேலும் கருத்து மறக்கப்படவுமாட்டாது, அதை மறைத்து வைக்கவும் முடியாது.

1930ம் ஆண்டளவில் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நான் கல்வி பயின்று வந்த காலத்தில், இங்கிலாந்தின் பிரதமராக இருந்த ஸ்ரான்லி பால்ட்வின் என்பவர் பல்கலைக் கழக வேந்தராக நியமிக்கப்பட்டு, பதவியேற்று, எமக்கு அளித்துள்ள பேருரையொன்றிலே பண்டைய கிரேக்க, உரோம எழுத்தாளர் மகத்தான விடயங்களைச் சின்னஞ்சிறு வாக்கியங்களால் எடுத்துரைத்தனர் என்றும், ஆனால் இன்று அதே கருத்துக்களைத் தெரிவித்தற்குப் பல நீண்ட வாக்கியங்கள் வேண்டியதாயிற்றே என்றும் கூறி வருந்தினர். அதே முறையினைக் கையாளும் பண்டிதமணி அவர்களை எமது எழுத்தாளர்கள் பின்பற்றுவரோ?

பண்டிதமணி அவர்கள் ஒரு சிந்தனைப்பட்டறையும் ஞானக் களஞ்சியமும் ஆவர். 1961ல் இப்பெரியாரின் 'சமயக் கட்டுரைகள்' எனப் பெயரிட்ட நூலின் வெளியீட்டுவிழா மலருக்கெனக் கட்டுரை ஒன்றினை வரைந்து அனுப்பும்படி பண்டிதமணி அவர்களின் புத்தக வெளியீட்டுச்சபையினர் என்னைப் பணித்தனர். அதுவரை நான் பண்டிதமணி அவர்களை நேரில் கண்டதேயில்லை. ஆனால் இந்நூலில் உள்ளடக்கியுள்ள அவரது புகைப்படப் பிரதியினைப் பார்த்தும் கேம்பிரிட்ஜ் கல்லூரி ஒன்றில் நான் கண்ட பண்டைக்கால கிரேக்க தத்துவஞானி சோக்கிரத்தீஸ் என்பானின் உருவப் படம் ஒன்று ஞாபகத்துக்கு வந்துள்ளது. இவ்விரு படங்களுக்குமிடையிலான ஒற்றுமைகண்டு வியப்புற்றேன் ஒற்றுமை அத்துடன் நிற்கவேயில்லை. கருத்திலும் கருத்தைத் தெரிவிக்குமிடத்துக் கையாளப்பட்ட முறையிலும் இவ்விரு மேதைகளுக்குமிடையே ஒற்றுமை, பண்டிதமணி அவர்களின் நூலிலும் சோக்கிரத்தீசின் மாணாக்கன் பிளேற்றோ என்பானின் 'அரசியல்' என்னும் நூலில் விவரமாகக் கூறப்பட்டுள்ள சோக்கிரத்தீசின் சம்பாஷணைகளிலும் வினாக்கள் அடுக்கி அடுக்கியும் விடைகள் இறுக்கி இறுக்கியும் வரும்.



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடந்த தக்ஷகாண்ட உரை வெளியீட்டுவிழாவில் பேராசிரியர் ஆ. வி மயில்வாகனம் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி வணக்கம் செலுத்துகிறார்.

பண்டிதமணி அவர்களின் கருத்துக்களுக்கும் உரோமாபுரி மன்னரின் அன்ரோனைன் வரிசையில் இறுதித் தோன்றலாகிய மார்க்கஸ் அவுரீலியசின் 'ஆத்மசிந்தனை' என்னும் நூலிலுள்ள கருத்துக்களுக்கும் இடையேயும் ஒற்றுமையாயிருக்கின்றது. இன, தேச, கால, மத. பேதம் எதுவாகிலும் மேதைகள் அதே விடயங்கள் ஆய்வர்: கிட்டத்தட்ட அதே முடிவுக்கு வருவர் என்பதே துணிபு.

பண்டிதமணி அவர்கள் நாவலர் குரு - சீடர்பரம்பரைவழி வந்தவர். நாவலர் பெருமான் பக்தி மார்க்கம் சென்றவர்; பண்டிதமணி அவர்களோ ஞானபாதத்தை கடைப்பிடித்தவராவர் பண்டிதமணி அவர்கள் பொதுநெறியாம் திருக்குறளைக் கசடறக் கற்றுணர்ந்து அதற்கேற்ப ஒழுகி வருபவர்: நீலகண்டரினது பாடியத்தின் செந்திநாதையர் தமிழாக்கத்தையும் சிவஞானபோதம் சித்தியார் முதலாய ஞானப் பனுவல்களைக் கற்றுத் தெளிந்தவர். யாழ்ப்பாணம், கொழும்புத்துறை ஹே. சுப்பிரமணிய

[5ம் பக்கம் பார்க்க]

# கந்தபுராண உரையை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயரவர்கள் இயற்றிய ஆன்ம விசாரம் எனப் பெயரிட்ட நூலால் பெரிதும் இயக்கி வைக்கப்பட்டவர். திருநெல்வேலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், தனிமையில் மிகச்சிறந்த தத்துவ ஞானியாகவும் விளங்கிய கைலாசபதியின் ஆப்த நண்பராக இருந்தவர்: ஆகவே பண்டிதமணி அவர்கள் ஞானவழி கடைப்பிடித்தது வியப்பன்று.

சமய வாழ்வில் முதற்படி கர்மயோகம் - சுயதர்மமம் உணர்ந்து அதன் படி ஒழுகுதல்; ராஜயோகம் உச்சப்படியில் இருப்பது. இவ்விரண்டிற்கும் இடையே பக்தியோகமும் ஞானயோகமும். இந்த வரிசைக் கிரமத்தை உணராது எம்மிற் பலர் இன்று பக்தியோ, ஞானத்தையோ கடைப்பிடித்து ஒழுகி வருகின்றனர். இதன் வழி வருவது கேடு. பல இன்னல்களுக்கு ஆளாகிவிட்டோம். கர்மயோகம் எம்மை புனிதமாக்கும். புனிதமான பின்னரே தான் பக்தி வழி செல்ல நாம் தகுதியுள்ளவர்களாகி. இதனைப் பண்டிதமணி அவர்கள் கந்தராணத்திருப்பாடலொன்று மூலம் எமக்குச் சுட்டிக்காட்டுகின்றார்.

‘முந்தொரு காலத்தில்
மூவுலகந் தன்னில்
வந்திடும் உயிர் செய்த
வல்வினை அதனாலே
அந்தமில் மறையெல்லாம்
அடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவ
ரும் மருளுற்றார்’

இதனைத் தொடர்ந்து பிறிதொரு நூலில் பண்டிதமணி அவர்கள் கூறுகிறதாவது

‘தேவர்களுக்குப் புலவர்கள் என்பது மற்றொரு பெயர். புலம்- அறிவு. தேவர்களை அசுரர்கள் வருத்தினார்கள், சிறைப்படுத்தினார்கள். அப்பொழுது புலவர்களாகிய தேவர்கள் அசுரர்களைக் குறை கூறவுமில்லை, மன்றாடவுமில்லை. தாம் தெய்வத்தை மறந்தமையால் நேர்ந்த பலன் அநுபவத்திற்கு வந்திருக்கிறதென்றுணர்ந்து தவத்தை மேற் கொண்டார்கள். பகை பறந்தோடியது. இந்த உண்மையைத் தேவாலயங்கள் வித்தியாலயங்கள், சைவத்தாபனங்கள் என்றிவைகள் உணர்ந்து தெளியுமானால் நம்மை எதிர்நோக்கும் பகை முகம் இன்முகமாம் என்பது சத்தியம்! சத்தியம்!! மும் முறை சத்தியம்.

‘இந்திர ராகி...’ என்ற பாடல் கந்தபுராணத்தின் பயன் கூறுகிறது. அப் பயனை அடையும் வழியைப் படிக்கிரமஞ் செய்து காட்டுகிறது ‘புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி’ என்ற பாட்டு.

நாம் உய்யும் வழி யாது? அன்று இடுக்கணுற்ற தேவர்மார் தவம் செய்தது போல. நாம் இன்று தவம் மேற்கொள்ளல் வேண்டும். இந்தத் தவம் யாது? பாரதியார் மிகச்சுருக்கமாகக் கூறுகிறார். ‘தன்னைத் தானே அறிய வேண்டும்; தன்னைத்தானே அடக்க வேண்டும் தன்னைத்தானே ஆள வேண்டும்; தன்னைத் தானே உயர்த்த வேண்டும்.’ இத் தவம் செய்தற்குக் கந்தபுராணம் உபகார நூல்; அது மிக்க நீண்டதாயிற்று- அதனைப் படித்து ஓதி உணர்ந்து ஒழுக எமது வாழ்நாள் போதியதாகுமா? நாம் இதையிட்டுவருந்தவேண்டியதில்லை. எவ்வாறு உபநிடதமாம் பாலிலிருந்து கடைந்தெடுத்த நெய்போல் கீதை விளங்குகிறதோ, அதே போல் விளங்கும் கந்த புராணத்தின் சாரமாம் தட்சகாண்டத்துக்குப் பண்டிதமணி அவர்கள் இயற்றியுள்ள அதியற்புத உரையில் பாராயணஞ் செய்து உய்வோமாக. இதுவே எம்மாற் செய்யக் கூடிய தவம் இவ்வுரையைத் தந்த பரோபகாரியைப் போற்றுவோமாக.

நன்றி: பண்டிதமணி பாராட்டுமலர்.

## அடையாள...

(3ம்-பக்கத் தொடர்ச்சி)

நோயாளரை யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு ‘அம்புலன்ஸ்’ வண்டியில் கொண்டு செல்வதற்குப் பணம்அறவிடும் நடைமுறையும் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் லலித்குமார் உத்தரவிட்டுள்ளார். இதற்கு மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நோயாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## ஓமந்தை வெறிச்சோடுகிறது!

(யாழ்ப்பாணம்)

ஓமந்தை இராணுவமுகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்களாம். வெளியேறும் மக்கள் சிலர் காடுகளைநோக்கிச் செல்வதாகவும், சிலர் வேறு இடங்களுக்குச் செல்வதாகவும், தெரிகிறது.

இதேநேரம் இராணுவம் இரவு நேரங்களிலும் ஓமந்தைக்காட்டுப்பகுதிகளில் தேடுதல்வேட்டையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஓமந்தையில் உள்ள தபால் கந்தோர் சிலநாட்களாகத் திறக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஓமந்தையில் அண்மையில் புகையிரதம் சேதமாக்கப்பட்ட பகுதியில் உள்ள புகையிரதப் பாதைகள் செப்பனிடும் வேலைகள் முடிவடைந்து வருவதாகவும் தெரிகிறது.

பறையனாலங்குளம் இராணுவ முகாமருகாகவரும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுவதுடன் பிரயாணம் செய்கின்ற இளவயதுடைய ஆண்களைக் கொண்டு இப்பகுதியில் உள்ள காடுகளைத் துப்பரவு செய்யும்படி இராணுவத்தினர் பணிக்கின்றனர் என்றும் அறியப்படுகிறது. (ஐ)

கடைசிநேர வரிவிளம்பரம்

விற்பனைக்கு

Honda [1] Chaly. [2] Super Cup-Economy கடைக்குரிய தளபாடங்கள், ருக்கைகள், அலுமாரி, ‘ஷோக்கேஸ்’ 379, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [C1736]

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
ரஜனி—ராதிகா
நல்லவனுக்கு நல்லவன்

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
நாகேஷ்-மனோரமா-சோ
V. K. ராமசாமி
நடித்த
ஆலயம்

5வது வாரம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

# சுதேச வைத்திய அமைச்சின் சிங்களப்பஞ்சாங்கம் பிரசுரம் திருப்பி அனுப்பப்பட்டன!

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள சுதேச வைத்திய அமைச்சு யாழ். மாவட்டத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்குத் தனிச்சிங்கள மொழியில் புதுவருட பஞ்சாங்கம் மற்றும் புதுவருடத்தை யொட்டிய பிரசுரங்களை இவ்வாரம் அனுப்பி வைத்துள்ளது.

புதுவருடத்தில் வீட்டில் தெளிப்பதற்காக மஞ்சள் பவுடர் பக்கற் ஒன்றும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட மேற்படி பிரசுரங்களுடன் இருக்கக் காணப்பட்டது. சுதேச வைத்திய அமைச்சர் திரு. வி. ஜே. எம் லொக்கு பண்டாரவின் புத்தாண்டு வாழ்த்து மடலும் இதில் அடங்கி இருந்தது.

வட இலங்கை ஆயுர்வேத வைத்தியர் சம்மேளனத்தின் அமைப்பாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட மேற்படி தனிச் சிங்களப் பிரசுரங்களையும். புத்தாண்டு வாழ்த்து மடலையும் சுதேச வைத்திய அமைச்சர் திரு லொக்கு பண்டாரவிக்குத் திருப்பி அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் இணைத்து அனுப்பி வைத்துள்ள தமது கடிதத்தில், டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

‘‘கடந்தவருட புத்தாண்டின் போது தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட இதுபோன்ற தனிச்சிங்களப் பிரசுரங்களையும் தங்களின் புத்தாண்டுவாழ்த்து மடலையும் தங்களுக்கு திருப்பி அனுப்பி வைத்திருந்தேன். அதற்குப் பதில் கடிதம் எழுதிய தாங்கள் சுதேச வைத்திய அமைச்சு அண்மையில் உருவாக்கப்பட்டது என்றும் போதுமான நிதி ஒதுக்கீடு கிடைக்கும்போது தமிழ் தட்டச்சு ஊழியர்களை நியமித்துத் தமிழ்மொழியில் பிரசுரங்கள் கிடைக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்திருந்தீர்கள். ஆனால் இந்த ஆண்டும் எவ்வித மாற்றமும் இல்லாது தனிச் சிங்களத்தில் சகலவற்றையும் அனுப்பியிருக்கிறீர்கள், இவற்றை வாசித்துவிளங்கிக்கொள்ள எமதுபகுதி ஆயுர்வேத வைத்தியர்களினால் முடியாதுள்ளது. ஆகவே இவற்றை திருப்பி அனுப்பிவைக்கின்றேன் இனிமேலாவது தமிழ் மொழியில் இவை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்’’.

## கிளிநொச்சி பிரஜைகள் குழு: இருவர் ராஜினமா

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிரஜைகள் தமுவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள், மோதல்களைத் தொடர்ந்து பொதுமக்கள் பாதிக்கப்படுவதைக் கண்டித்து பிரஜைகள் குழுவின் உபதலைவரான டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி தமது பதவியை ராஜினாமா செய்துகொண்டார். இதேவேளை பிரஜைகள் குழுவின் பொருளாளரான திரு. ரி. எஸ். தர்மசிங்கமும் ராஜினாமாச்செய்துகொண்டார் பிரஜைகள் குழுவைக்கலைத்துவிட்டுப்புதிய தெரிவை வைக்குமாறு ராஜினாமாச்செய்தோர் கோரி உள்ளனர்.

## இலங்கை அரசின்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சாதகமான உறுதிமொழிகளை புதுடில்லிசெல்லும் இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஹமித் முன்வைக்கும்பட்சத்தில், இந்தியப் பிரதமரின் விசேஷதூதுவர் கொழும்புக்கு அனுப்பப்படுவாரெனவும் அத்துடன் இவ்விடயம் குறித்து சென்னையிலுள்ள தமிழ்த்தலைவர்களின் கருத்தும் அறியப்படுமெனவும்தெரியவருகிறது.

இதேவேளையில் தற்போது அமுலிலுள்ள யுத்த நிறுத்தம் குறித்தும் புதியநடைமுறைகளை கடைப்பிடிக்கும் வகையில் இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தியும், இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு பல்ராம் பஹத்தும் ஜனாப் ஹமீத்துக்கு எடுத்துரைப்பார்கள் என்றும் கருதப்படுகிறது. [ய-பி]

## அன்னையர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அண்மைக்காலமாகப்பத்திரிகைகளில் அன்னையர் முன்னணி வேறு அமைப்புகளுடன் சேர்ந்து செயலாற்றுவதாக வெளிவந்த செய்திகள்தொடர்பாகவே இவ்வறிக்கை வெளியிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்னையர் முன்னணியின் மத்திய செயற்குழுவினால்நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மத்திய செயற்குழுவின் தீர்மானத்திற்கு மாறாக எந்தவொரு அங்கத்தவரும் செயற்பட்டுவந்தால் அது அவர்களது தனிப்பட்ட முறையிலான செயற்பாடு எனவும் அவர்கள் அன்னையர் முன்னணியைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை எனவும், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரியாலை வைரவர் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

அரியாலை ஆனந்தன் வடலி வீதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. இன்று பகல் விசேட ஆராதனைகளும், அபிஷேகங்களும் நடைபெற்று இரவு சுவாமி வீதியுலா வருதலும் நிகழும். 21ந் திகதி பகல் சகஸ்ர சங்காபிஷேகமும், 22ந் திகதி திருக்குளிர்த்தி அபிஷேகமும், அன்னதானமும் நடைபெறும். [ஐ]

## நீர்வேலி வீதித்தடை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தை ஆட்சேபித்து நியாயம் சோரி போடப்பட்டிருந்த வீதித் தடைகள் இன்னமும் அவ்விடத்திலிருந்து அகற்றப்படவில்லை.

## கடத்தப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தகப் பிரமுகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். (மா)

## இளைஞர்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

நேற்றுக்காலை 7 மணிக்கு இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

பாலம் ஒன்றுக்குக்கீழ் பதுங்கியிருந்த ஆயுதப்படையினரே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத்தெரியவருகிறது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கிருஷ்ணபிள்ளை சிவயோகராசா (23 வயது) என்பவரே பலியானவராவர். செல்லத்தம்பி பவானந்தராசா (26 வயது) என்பவர் பற்றித் தகவல் தெரியவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக வவனியா மாவட்ட பிரஜைகள் குழுவுக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது. (மா)

மலிவு விற்பனை

SVP சிவம் ஸ்தாபனத்தாரின்
புதுவருட மலிவு விற்பனை

சகலவிதமான புடவை வகைகளும்,
சிறுவர், சிறுமிகளுக்கான தயாரித்த உடுப்பு வகைகளும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

SVP சிவம்,
(நவீன சந்தை),
14 A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(C 1679)

# சந்நிதி ஆலயத்தின் மணிக்கூட்டுக்கோபுரம் சேதம் காண்டாமணி விழுந்துவிட்டது!

[வல்வெட்டித்துறை]

நேற்று முன்தினம் காலையிலும் அதற்குமுன்தினம் மாலையிலும் தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்தும் ஹெலிக்கொப்டரிலிருந்தும் தொடர்ந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய மணிக்கூட்டுக் கோபுரம் சேதமடைந்து பெரிய காண்டாமணி கீழே விழுந்து கிடக்கிறது. மடப்பள்ளி வள்ளி அம்மன் முன் கொட்டகை முதலியன சேதமடைந்துள்ளன.

முகாமிலிருந்து ஏவப்பட்ட மோட்டார் ஷெல் தாக்குதலுக்கு இலக்கான பெரிய மணிக்கூட்டுக்கோபுரம் சிதைக்கப்பட்டு மேலிருந்த பெரிய காண்டாமணி கீழே சாய்ந்து விட்டது. இதனை இனிமேல் செப்பனிட்டு மணி அடிக்க வைக்க பல லட்சம் ரூபா செலவாகலாம். கீழே விழுந்த மணியில் வெடிப்பு ஏற்பட்டதால் புதிய மணியே வார்த்தெடுக்க வேண்டியிருக்கும்.

அத்துடன் வள்ளியம்மன் ஆலய ஸ்தூபிகளிலும் சிராய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. முன்னுலிருந்த கொட்டகை முற்றாக சேதமடைந்து தரையில் வீழ்ந்து கிடக்கின்றது. கோவில் மடப்பள்ளி சுவர்கள் இடிந்து கிடக்கின்றன. கூரைகளின் ஓடுகள் சல்லடையாகக் காட்சியளிக்கின்றன.

அத்துடன் கோவிலைச்சூழ உள்ள பல மடங்களும் இத் தாக்குதல்களுக்கு இலக்காகி சேதமடைந்துள்ளன. இச் சுற்றுப் பகுதியில் பொதுமக்களோ மடங்களில் அடியார்களோ இல்லாததால் உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## மதகு திருத்தப்பட்டது

(வவனியா)

தீவிரவாதிகளினுல் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட புகையிரத நிலைய வீதி மதகு பொது மக்களினுல் திருத்தப்பட்டுள்ளது.

இவ் வீதியால் வாகன போக்குவரத்து செய்ய முடியாது இருந்தது ஆனுல் உடைந்த மதகு மண் போடப்பட்டு திருத்தப்பட்டதினுல் வாகன போக்குவரத்து செய்ய முடிகின்றது.

கண்டி வீதியில் தகர்க்கப்பட்ட மதகு பெரும் தெருக்கள் திணைக்களத்தினுல் திருத்தப்பட்டுள்ளது.

கண்டி வீதி முதல் யாழ் வீதி ஓமந்தை வரைக்கும் பழுதடைந்துள்ள பிரதான வீதிகள் செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## நிர்வாகிகள்

[சுண்டுக்குளி]

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவா: திரு. அ. மகாலிங்கம், செயலாளர்; திரு. செ. முத்துக்குமாரசாமி, உப செயலாளர்: திரு. வே. தேவரத்தினம், பொருளாளர்; திரு. க. கதிரேசு இத்துடன் 7 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 30 (12 - 4 - 1986)
கிழமை- சனி
திதி- திருதியை
பி. ப. வரை
நக்ஷத்திரம்- கார்த்திகை
பி. இ வரை

மேடம்: நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண் பழிக்கும் இலக்காக நேரும். துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

இடபம்: இடர்கள் பல தாக்கும், இதயத்தில் எரிமலை குமுறும். உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அனைத்துக் கொள்ள நேரும்.

மிதுனம்: நீண்டநாள் ணி நீங்குவதற்கு இடமுண்டு. மனை வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். பேச்சாளர்களுக்கு சிறப்பான தினம்.

கடகம்: ஆசார குறை விற்கும். அதிக பொருள் விரயத்திற்கும் இடமுண்டு. இன்று அதிகம் பேச்சைத் தவிர்க்கவும்.

சிங்கம்: கடந்த கால நினைவுகள் உங்களுக்குக் கவலையைத் தரும். பிறர் மீது அதிக நம்பிக்கை வைப்பதைத்தவிர்த்துக் கொள்ளவும் தாய் வழிச் சுகமும் உண்டு.

கன்னி: அறவழிகளை மனம் நாடும். கவர்ச்சி கரமான பொருட்களை விரும்புவீர்கள் உங்கள் உதவிக்குப் புத்திரர் விரைவர்.

துலாம்: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம் பெறலாம். தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் எதிலும் முன் யோசனை நன்று.

விருச்சிகம்: பசுமையான சம்பவங்கள் நடைபெறும். களஸ்திரவழியால் நன்மைகள் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாகும்

தனுசு: நம்பிக்கை மோசம நடக்கும். நண்பர்களும் காலை வாரி விடக்கூடும். எச்சரிக்கை வேண்டும்.

மகரம்: பிறருக்கு உதவுவதி முன் நிற்பீர்கள். இதன் மூலம் பணமும் செலவாகும். பொதுப்பணியாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம்.

கும்பம்: செய்தொழில் மூலம் சிறப்புண்டு பெரியவர்கள் ஆசியுமுண்டு. விளையாட்டு வீரர்கள் முதலிடம் பெறுவர்.

மீனம்: செலவுக்கு வேண்டிய பணம் இன்று கிடைக்கும். விருந்துபசாரத்திற்கும் இடமுண்டு. தொழிலிலும் நன்மையுண்டு.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**



(A-434)

# விக்னு டியூசன் சென்ரர்

ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்]

## A/L 88 கலை, வர்த்தக, விஞ்ஞானம்

ஆரம்பம் 19-4-1986 மாலை 1.00

**கலை, வர்த்தக, தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு:-**

| | | | |
|---|---|---|---|
| பொருளியல்: | திரு. கிருஷ்ணனந்தன் | தமிழ்: | திரு. குழந்தை |
| வர்த்தகம்: | திரு. லங்கா | புவியியல்: | திரு. குணராஜா |
| கணக்கியல்: | திரு. வன்னியசிங்கம் | இந்துநாகரிகம்: | திரு சர்மா |
| அளவையியல்: | திரு. சுப்ரமணியம் | அரசியல்: | திரு. மஃறூவ் |

தூய, பிரயோக கணிதம்: திரு. தயாபரன் B.Sc. [ஆரம்பம் மாலை 3.00 மணி]

A/L 87—

Pure Maths — Calculas
Applied Maths — Dynamics

மு.குறிப்பு

★ தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்தும் ஒரே ஒரு நிறுவனம்.

★ 88ம் ஆண்டுக்கு பரீட்சைக்கு தோற்றுவிக்கும் மாணவர்கள் 19ம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். (A430)


# வருடாந்தப் பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை காலை சங்கத் தலைவர் திரு. ஆ. ந இராசேந்திரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

# இலட்சார்ச்சனை

[புலோலி]

தும்பளை நெல்லண்டை அம்பாள் ஆலயத்தில் புதுவருட தினமான 14ம் திகதி இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது.

நாட்டில் பகை நீங்கி சமாதானம் நிலவி நாடுவளம்பெறவும் மக்கள் நல்வாழ்வு பெற்று மகிழ அறம் தழைக்கவும் அம்பாளை வேண்டியே இந்த இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது. அன்றையதினம் அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெற்று அம்பாள் திருவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

# வைத்தியசாலை அபிவிருத்தி சபை

[புலோலி]

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவின் விபரம் தலைவர். டாக்டர். கே. லலிதகுமார் [மாவட்ட வைத்திய அதிகாரி] உப தலைவர்கள் டாக்டர் எஸ். கணேசநாதன், டாக்டர். எஸ். கிருஸ்ணபிள்ளை. டாக்டர் ஆர் குழந்தைவடிவேல், செயலாளர்: திரு. இரத்தின சிவபாதசுந்தரம், உப செயலாளர்: திரு. க. சிவபாதசுந்தரம், [அதிபர்] பொருளாளர்: திரு. கே. தில்லைநாதன் [வங்கி முகாமையாளர்] செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.


தேசிக்காய் வாசனையுடன்

# புதிய எம்டீ பார் சோப்




650g
Rs. 12/50

சிக்கனமாகவும், பாதுகாப்பாகவும், பளிச்சிடும் வெண்மையாகவும் சலவை செய்ய இன்றே வாங்குங்கள்.

## புதிய எம்டீ பார்சோப்

ஒவ்வொரு புதிய பார்சோப்புடனும் ஓர் பொக்கற் கலண்டர் இலவசம்.

## எம்டீ என்ரபிறைஸ், அச்சுவேலி.

(A 408)



# பத்திரிகைத்துறை பயிலுனர்கள்

''ஈழநாடு'' ஆசிரியர் பீடத்தில் பத்திரிகைத்துறை பயிலுநர்களுக்கான பதவி வெற்றிடம் உண்டு. கல்வி மற்றும் தகுதிச் சான்றுப் பிரதிகளுடன் நேர்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பம் செய்க.

விண்ணப்பங்கள் 18-04-86 வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

ஆசிரியர் பகுதி பயிலுனர்,
நிர்வாகி,
த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

(A 575)



# விற்பனைக்கு

இலக்கம் 40 ஸ்ரீ 70
தொடர் இலக்கம் உடைய
இசுசு (ISUSU) J. C. R. 500
36000 கிலோமீட்டர் ஓடியது. 22' தேக்கு பொடி.
மொடல் — 1984
பார்வை இடும் இடம்:

## வூட்லன்ட் டயர் சேவிஸ்

பண்டாரநாயக்க மாவத்தை,
இரத்தினபுரி.

T. P. 0452506 (C 1710)


# விக்ரர் அன் சன்ஸ்

## நன்றியறிதல்

எமது ஸ்தாபனத்தில் கொள்ளைபோனதைக் கேள்வியுற்று நேரில் வந்து அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான முன்னைநாள் பிரதம குரு ஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா அவர்களுக்கும், நல்லூர் வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான குரு ஸ்ரீ சண்முகரட்ண ஐயர் அவர்களுக்கும், யாழ் மாநகர ஆணையாளர் அவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும், அனுதாபமும், ஆறுதலும் தெரிவித்த ஏனைய பெரியோர்களுக்கும், நண்பர்களுக்கும்—

4-4-86 அன்று தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி அனுதாபம் தெரிவித்த வர்த்தகப் பெருமக்களுக்கும் - சிறப்பாக இன மத பேதம் பாராட்டாது எமக்கு ஆதரவு காட்டிய முஸ்லிம் வர்த்தகப் பெருமக்களுக்கும், வட மாகாண வீடியோ சங்க உறுப்பினர்களுக்கும்—

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது மறியற் போராட்டத்திற் கலந்து கொண்ட அன்பர்களுக்கும்—

மிகக் குறுகிய காலத்தில் பெரும் எண்ணிக்கையான வர்த்தசப் பெருமக்களின் அன்பையும் ஆதரவையும் எமக்குப் பெற்றுத் தந்த யாழ். வர்த்தக சங்கச் செயலாளர் திரு. நமசிவாயம் அவர்களுக்கும்—

எங்கள் ஸ்தாபனத்திடமிருந்து கொள்ளைபோன பொருட்களை மிகக் கூடிய சீக்கிரத்தில் கண்டுபிடித்துத் தருவதாக வாக்குறுதி அளித்திருக்கும் ''புனித'' இயக்கங்களுக்கும்—

பலவகையாலும் எம்முடன் தோளோடு தோள் நின்று உழைத்த ஸ்ரான்லி வீதி வாழ் மக்கள், அரசடி சன சமூக நிலைய இளைஞர்கள், நாவாந்துறை நண்பர்கள் அனைவருக்கும்—

கடையடைப்பு, வழி மறிப்பு தினத்தன்று போராட்டத்தில் கலந்துகொண்ட மக்களுக்கு குளிர் பானம் வழங்கிய நாகராசா எலெக்றிக்கல்ஸ் வேக்ஸ் உரிமையாளர் அவர்களுக்கும்—

எமது ஸ்தாபனத்தில் மேற்கொண்ட கொள்ளைபற்றியும், அக்கொள்ளையைக் கண்டித்து நடாத்தப்பெற்ற கடையடைப்பு, வழிமறிப்புப் போராட்டம்பற்றியும் செய்திகள் வெளியிட்ட யாழ். பத்திரிகை நிறுவனங்களுக்கும்—

இன்னும் பலவகையால் எமக்கு ஆதரவு வழங்கிய பெருமக்கள் அனைவர்க்கும்—

**எமது மனமார்ந்த நன்றியறிதலைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பைத் தாங்கிக்கொண்டு நாம் மீண்டும் தமிழ் பேசும் மக்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் பழைய உத்வேகத்துடன் சேவைசெய்ய இறையருளும், நல்லோர் ஆசியும் எமக்குத் துணைநிற்கும் என விசுவாசத்துடன் நம்புகிறோம்.

வணக்கத்துடன்

**விக்ரர் அன் சன்ஸ்**
**உரிமையாளரும், ஊழியர்களும்,**
100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(A 1708)


# VACANCY

**MECHANICAL ENGINEER**

We are looking for a dynamic young Mechanical Engineer with BSc or equivalent qualifications and having minimum of 5 years practical experience in executive capacity.

The job will involve undertaking the mechanical design and fabrication of custom built plant and machinery for industrialists and entrepreneurs. Specific aspects include the cost estimation of projects and ensuring the quality of plant and machinery manufactured are of approved standard.

He will be responsible for organising and controlling projects and to formulate new strategy to promote sales.

We are able to offer successful applicant an attractive salary plus other fringe benefits.

**MARKETING EXECUTIVE**

We are looking for a Marketing Executive who will promote sale of the company by identifying prospective customers for our products.

He should have at least 5 years executive experience in private sector in the similar capacity.

The selected candidate will be rewarded with a negotiable package.

Apply To:
Managing Director,
Promoters Engineering Company Ltd.,
844, Point Pedro Road, Nallur, JAFFNA.

(A 560)

# தாதிகள் போராட்டத்துடன் தமிழர்கரமும் இணையட்டும்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் பேசும் மக்களின் தேசவிடுதலைப் போராட்டத்தைக் காரணம் காட்டி பாதுகாப்பிற்குச் செலவிடப்படும் சுமார் 650கோடி ரூபாவும், மாதம் தவறாமல் நீடிக்கப்படுகின்ற அவசரகாலச் சட்டமும் தமிழ்பேசும் மக்களைக் கொல்லவே இதுவரை பயன்பட்டுவந்தது. இவ்வாறு மக்களைக்கொல்வதில் ஆவேசம் காட்டும் அரசு, வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இன்றையநிலையில் ஒரு சம்பள உயர்வைக்கூட வழங்கமறுக்கிறது. கூடவே தமிழ்பேசும் மக்களின் தேசவிடுதலைப் போராட்டத்தைக் காரணம் காட்டி நவீன மயப்படுத்தப்பட்டுள்ள அரசபடை இன்று தாதிமாரைப் பலவந்தமாக விடுதியிலிருந்து வெளியேற்றி, வைத்தியசாலைகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. அதுமட்டுமன்றி இதே காரணத்தைக் காட்டி நீடிக்கப்பட்டுள்ள அவசரகாலச்சட்டத்தின் கீழேயே தற்போது தாதிமார் சங்கமும் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்படி அரசு தமிழ்பேசும் மக்களிற்கு மட்டுமல்ல, சிங்கள மக்களின் நலனிற்கும் விரோதமானதே என்பதும் இன்றுவரை தமிழ் பேசும்மக்களை நோக்கி நீட்டப்பட்டுள்ள துப்பாக்கிகள் நாளை சிங்கள மக்களிற்கும் எதிராக நீட்டப்படும் என்பதும் தெளிவாகின்றது.

தேசிய மாணவர் மன்றத்தினுல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைமேற்கண்டவாறுகூறுகின்றது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''சகல உழைக்கும் மக்களும் இதனை நன்குணர்ந்து இனவாத உணர்வுகளைப் புறம்பே தள்ளி பரஸ்பரம் மக்கள் பிரிவுகட்கு எதிரான உணர்வுகளை உடைத்தெறிந்து, அரசிற்கெதிரான போராட்டத்தில் இறங்கவேண்டும். அதற்கு இன்றைய தாதிமார்களின் போராட்டம் ஒரு தொடக்கமாக அமையட்டும்.

''தாதிமார்களின் போராட்டம் இன, மத, பிரதேச,பால் வேறுபாடுகட்கு அப்பால் முழு மக்களதும் போராட்டமாக வளரவேண்டும். அரசின் சர்வாதிகாரத்திற்கும் ஜனநாயக விரோத இராணுவ ஆட்சியமைப்பிற்கும் எதிரான போராட்டமாக சரணடைவிற்கும் விட்டுக்கொடுப்பிற்கும் எதிரான போராட்டமாக வளரவேண்டும்.

''அத்துடன் தாதிகள் உட்பட சிங்கள மக்களின் போராட்டமானது தமிழ்பேசும் மக்களின்தேசவிடுதலைப் போராட்டத்திற்கு வலுவூட்டுவதாகவே அமையும். சிங்கள மக்களிடையே எவ்வளவுக்கெவ்வளவு அரசு அம்பலப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு தமிழ்ப்பேசும் மக்களின் தேசவிடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மை ஏனைய சிங்கள மக்களால் உணரப்படும். [மா]

## 'கிழக்கு ஜே. ஆரின் சொத்தா என்ன?' அமைச்சர் அல்விஸ் கேட்கிறார்

(கொழும்பு)

''தமிழீழப் போராளிகள் 'ஈழம்'தவிர வேறெதுவும் தேவையில்லை எனக் கூறிவருகின்ற வேளையில் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணுவது எப்படி? வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்குக் கிழக்கு ஜே. ஆரின்சொத்தா என்ன?''

கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தையடுத்து நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ்மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக ஜனுதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தன தலைமையிலான விசேடகுழுவொன்று தற்போது இயங்கிவருகிறது. இனப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு புதிய ஆலோசனைகள் சமர்ப்பிப்பது சம்பந்தமாக இக்குழு மீள்பரிசீலனை செய்து வருகிறது.

''இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியினுலோ, பண்டாரியினுலோ, ஜனுதிபதிஜே ஆர் ஜயவர்த்தனுவாலோ இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்க முடியாது. பலதரப்பட்டவர்களும் ஒன்றுகூடி தமிழர் விடுதலைக்கூட்டணியினர்போராளிகள் பேசவேண்டும் (வா)

## காணுமல்போன தாலிக்கொடி மீண்டும் கிடைத்தது!

(பண்டத்தரிப்பு)

மினிபஸ் ஒன்றில் பிரயாணம் செய்த ஒரு பெண்மணி கூடையுடன் தவறவிட்ட 21 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தாலிக்கொடி இளைஞர்கள் சிலர் மேற்கொண்ட முயற்சியினுல் மீண்டும்கிடைத்துள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம்-மாதகல் மினிபஸ் ஒன்றில் பிரயாணம் செய்த சண்டிலிப்பாயைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பாதுகாப்புக் கருதித் தான் அணிந்திருந்த தாலிக்கொடியைக் கழற்றிக் கூடை ஒன்றினுள் வைத்திருந்தார். அவர் சித்தன்கேணிச் சந்தியிலுள்ள பஸ் தரிப்பில் இறங்கியபோது தாலிக்கொடியுடன் இருந்த கூடை காணுமல்போய்விட்டதைக் கண்டு திகைத்தார். இவ்விஷயத்தை அறிந்த இளைஞர்கள் சிலர் மேற்படி மினிபஸ்ஸில் பிரயாணம்செய்த ஏனைய பிரயாணிகளை விசாரணை செய்தனராம். இறுதியில் அந்த பஸ்ஸில் பிரயாணம்செய்த பெண்ஒருவரை அவரது வீட்டிற்குச் சென்று விசாரணைசெய்தபோது அவரிடம் அக்கூடையும், தாலிக்கொடியும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாம். தாலிக்கொடி மீண்டும் உரிமையாளரான சண்டிலிப்பாயைச் சேர்ந்த மேற்படி பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Ee anadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## ஒற்றுமை, அமைதி வேண்டி வவனியா மாவட்டத்தில் 'வெண்கொடி இயக்கம்'

(வவனியா)

புத்தாண்டு தினத்தில் வவனியா மாவட்டத்தில் வெண்கொடி இயக்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

அன்று இனஒற்றுமைஏற்படவும் அமைதிநிலவவும், சமாதானம் பேணவும், சர்வமத பிரார்த்தனை நடந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் வவனியா ஆயுதப் படையினரின் முகாமில்நேற்று முன்தினம் நடைபெற்றது. வவனியா இணைப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு கே. சி. லோகேஸ்வரன் உட்பட சர்வமதத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

புத்தாண்டுத் தினத்தன்று நடைபெறவிருக்கும் சர்வமத பிரார்த்தனையை வவனியா தமிழ்மகாவித்தியாலத்தில் நடாத்துவதென்று இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. [மா]

## முருங்கன் தபாலக ஊழியர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

முருங்கன் தபாற்கந்தோரில் கடமைசெய்கின்றஊழியர்களை இப்பகுதி இராணுவத்தினர் அழைத்து விசாரணை செய்த பின்னர் விட்டுள்ளனராம்

தபால் கந்தோரில் மணியோடர் அனுப்ப இராணுவத்தினரின் பணம் எடுத்துச்செல்லப்பட்டபோது அதனை இனந்தெரியாத இளைஞர் பறித்தெடுத்ததினுல் மேற்படி கந்தோர் ஊழியர்களை இராணுவத்தினர் விசாரணைக்காகக் கூட்டிச்சென்றிருந்தனர். விசாரணையின் முடிவில் சகல ஊழியர்களும் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## மனேவைத்திய நிபுணர்வீட்டில் திருட்டு

[யாழ்ப்பாணம்]

பூட்டப்பட்டிருந்த மனேவைத்திய நிபுணரின் வீடு உடைக்கப்பட்டுச் சுமார் 22 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் மனேவைத்திய நிபுணர் ஏ செல்வரத்தினம் என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் மனேவைத்திய நிபுணரின் வீடுள்ளது.

## இந்த ஆசிரியர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றங்களைச்செய்து இரண்டாம் தவணையிலிருந்து ஆசிரியர் கலாசாலைகளுக்குச் செல்ல அனுமதிவழங்குமாறு கல்வி அமைச்சுச் செயலாளர் சகல கல்விப்பணிப் பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

மற்றும்ஆங்கிலப் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்கள் தாம் விரும்பும்பாடங்களில்ஆசிரியர் பயிற்சியைப்பெற அனுமதிக்கப்படவேண்டும் என்றகோரிக்கையையும் அமைச்சுச்செயலாளர் ஏற்றுக்கொண்டுள்ளாராம். (ஐ)

## மரண அறிவித்தல்

### பொ. சந்திரராசா

உப தபால் அதிபர் பொன்னையா சந்திரராசா [யாழ். மின்சார நிலைய வீதி, உபதபாலகம்] காலமானுர். அன்னுர் புஷ்பராணியின் அன்புக் கணவரும், குமுதினி, சாந்தினி, மதிமுகன், தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் இன்று 12 04-86 பிற்பகல் 2 மணியளவில் அன்னுரின் நவாலி இல்லத்தில் நடைபெற்று கொத்துக்கட்டி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இதனை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

மனைவி.

நவாலி,
மானிப்பாய். [C 1740]

### திருமதி மீனுட்சி - கனகர்

திருமதி மீனுட்சி கனகர் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பிரபலசிற்பாச்சாரியார் கனகரின் அன்பு மனைவியும், இளைப்பாறிய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்காளர் திரு குமாரசாமி திருமதி மனேன்மணி, சிவசம்பு, கனகாலயம் ஸ்தபதி செல்வராசா, கமலராசா (U. K ) ஆகியோரின் அன்புத்தாயாரும், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் காரியாலய நிர்வாக உத்தியோகத்தர் சிவசம்பு, திருமதி செல்வராணி, புவனேஸ்வரி, தேவராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயராணி, உதயகுமார் (கனடா), தேவிகா (கனடா), தேவகி, மணிவண்ணன் (U. K ), கமலவண்ணன், கலைச்செல்வன், உமா, பூரணி, குமுதம், குமரன், குணளன், கதிரவன், துர்க்கா, துவாரகா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னுரின் ஈமக் கிரியை சனிக்கிழமை பத்திரகாளி கோவிலடி உதயபவனத்தில் நடைபெற்றுபி. ப. 4 மணியளவில் செம்பாடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும். (C 1754)

### திருமதி சின்னத்தங்கச்சி இராசரட்டினம்

திருமதி சின்னத்தங்கச்சி இராசரட்டினம் காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற திரு சி. இராசரட்டினத்தின் மனைவியும், காலஞ்சென்ற ஈஸ்வரி, பத்மநாதன் [பரந்தன் கெமிக்கல்ஸ்], சுகுணவதி, குணநாதன் [நைஜீரியா], யோகநாதன் [ஓமான்] ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற Dr தேவதாசன் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ந துரைராசா, [A. D R.] ரேவதி, சீதாலட்சுமி ஆகியோரின் மாமியாரும்; விஜயகுமார் [ஹட்டன் நஷனல் வங்கி, திருகோணமலை], Dr. பகீரதன், பாஸ்கரன், கிருபாகரன், ஆதவன், அமிர்தன், அசோகன், ராகவன், பரதன், மைதிலி, சுமதி மீரா, ராதிகா, சுபோதினி, கார்த்திகா ஆகியோரின் பேத்தியும், துவாரகா, மதுஷன், லாவண்யா, கௌஷல்யா ஆகியோரின் பூட்டியும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று [12-04-1986] காலை 8-00 மணிக்குஅன்னுரின்இல்லத்தில் நடைபெற்று பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

அன்னுரின் பிள்ளைகள்.

மேதர் ஒழுங்கை,
மானிப்பாய். [C 1739]

### திருமதி பொன்னையா பொன்னம்மா - கொக்குவில்

திருமதி பொன்னையா பொன்னம்மா காலமானுர், அன்னுர் காலஞ்சென்ற விநாசித்தம்பி பொன்னையாவின் அன்பு மனைவியும், திரு பொ. சின்னத்துரை. (முன்னைய பரிபாலன உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி, பதிவாளர், நீதவான் நீதிமன்றமும், மாவட்ட நீதிமன்றமும் யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற திருமதி பொன்னையா பரமேஸ்வரி அவர்களின் தாயாரும், திரு. கார்திகேசு சின்னையா (சிங்கப்பூர்), திரு. கார்த்திகேசு வைத்திலிங்கம் (சிங்கப்பூர், காலஞ்சென்ற திருமதி நாகலிங்கம் நாகம்மா, காலஞ்சென்ற திருமதி செல்லையா சுபத்திரை ஆகியோரின் சகோதரியும், திரு செல்லர் பொன்னையா ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், கல்முனை) திருமதி புஷ்பகாந்தி சின்னத்துரையின் அன்பு மாமியாரும், புஷ்பராஜன், சுரேஷ்வரன் கனடா), சர்வலோஜினி, தேவகுமாரன் (மலேசியா), இந்திரகுமாரன், பாலகுமார் (Holland), ஜெயகுமார் (India) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 12-4-86 (சனிக்கிழமை) பிற்பகல் 3-00 மணியளவில் 160, கே. கே. எஸ். ரோட் (குளப்பிட்டிச் சந்தி) கொக்குவில் (சின்னத்துரை) அவர்கள் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும் உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவேண்டுகிறேம்.

அறிவிப்பவர்:
பொ. சின்னத்துரை

(C 1737)